# பத்திரிக்கை செய்தி

## பட்டா பெயர் மாற்றம் செய்ய ரூ.10,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் கைது

புகார்தாரர் திரு.மேகநாதன், நடுக்கோட்டை, ரங்கசமுத்திரம், குடியாத்தம் தாலுகா, வேலூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் குடும்பத்திற்கு சொந்தமான நிலத்தில் புகார்தாரருக்கு பிரித்துக் கொடுக்கப்பட்ட நிலத்திற்கு தன்னுடைய பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்ய அக்ராகரம் கிராம நிர்வாக அலுவலகம், குடியாத்தம் தாலுகா, வேலூர் மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். திரு.ஜெயமுருகன், கிராம நிர்வாக அலுவலர், அக்ராகரம் கிராம நிர்வாக அலுவலகம், குடியாத்தம் தாலுகா, வேலூர் மாவட்டம் அவர்கள், விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து புகார்தாரருக்கு தனிப்பட்டா வழங்க தனக்கு ரூ.10,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், வேலூர் மாவட்ட லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 26.09.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ஜெயமுருகன், கிராம நிர்வாக அலுவலர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் திருமதி.தேன்மொழி, கிராம உதவியாளர், அக்ராகரம் கிராம நிர்வாக அலுவலகம், குடியாத்தம் தாலுகா, வேலூர் மாவட்டம் அவர் லஞ்ச பணம் ரூ.10,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.